கத்தோலிக்க வாரவெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)

மலர்: 97 இதழ்: 45
கார்த்திகை 25 — 1972
பிரதி சதம் 15

சத்தியவேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக்காக்கிறவன் கண்விழிப்பது வீண்"

வாசித்துப் பயன்பெறுக!

ஞாயிறு நற்சிந்தனையும்
விசுவாசிகளின் மன்றாட்டுக்களும்
அடுத்த வாரம்தொடக்கம்
காவலனில் இடம்பெறும்

மெல்போண் நகர சர்வதேச சற்பிரசாத மகாநாடு

1973-ம் ஆண்டு மாசிமாதம் அவுஸ்திரேலிய தேச மெல்போண்நகரில் நடக்க இருக்கும் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டில் இலங்கை மக்களையும் ஆன்ம சமூகத்தராய் பங்குகொள்ளத் தயாரிக்கும் நோக்கத்துடன் கொழும்பு அதிமேற்றிராணியாராகிய கருதினல் கூறே அடிகளார் இம்மாதம் 12-ம் திகதி ஒரு நிருபம் அனுப்பியிருக்கிறார். இந்த ஆயத்தத்தை மூன்று படலங்களாக நிறைவேற்றக் கேட்கப்பட்டிருக்கின்றோம். நத்தார் திருநாட்களுக்கு முன்வரும் ஆகமனகாலத்தில் வேதபோதனைகளில் விசுவாசத்தில் ஊக்கப்பட்டும், நத்தார்வாரத்தில் திருவிருந்து அடிக்கடி அருந்தியும் நத்தாருக்குப் பிந்திய காலத்தில் வேதபோதக தொண்டில் ஈடுபட்டும் "சர்வதேச" சற்பிரசாத மகாநாடு என்னும் நாமதேயத்தை அர்த்தமுடையதாக ஆக்குவோமாக.

வடஅயர்லாந்து ஆங்கில அரசாங்க அதிபர் விட்லோ கத்தோலிக்கருக்கு அளித்த உறுதி

"வடஅயர்லாந்து அல்ஸ்ரார் பிரிவில் சமாதானம் நிலைநாட்ட ஆங்கில அரசாங்கம் சமீபத்தில் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் அடங்கியவற்றுக்கு கத்தோலிக்கர் ஆதரவு அளிக்க முன்வந்தால், நிச்சயமாகவே கத்தோலிக்கர்களுக்கு நீதி செய்யும் முறையை அவர்கள் கண்டுகொள்வார்கள்" என வட அயர்லாந்து கருமபொறுப்பாளியாகிய அதிபர் விற்லோ அவர்கள் யூனிவேர்ஸ் பத்திரிகை விசேஷ நிருபருக்குச் சென்ற வாரம் உறுதி கூறியிருக்கிறார். கத்தோலிக்கரின் பாதுகாப்பாளரெனத் தம்மைக்கூறிக்கொள்ளும் ஐ. ஆர். ஏ. குழுவினரும், புரொட்டஸ்தாந்து மக்களின் பாதுகாவலரென்னும் பெயிஸ்லி ஆதரவாளர்களுமே சமாதானத்துக்குமுட்டுக்கட்டைகளாவர்.

பொது நிலையாளன் ஒருவனுக்கு தன் பதவியைக் கொடுத்தார் ஆயர்

ஆங்கில நாட்டு லிவப்பூல் நகர அதிமேற்றிராணியார் பெக் அடிகளார் சில தினங்களின்முன் தமது மேற்றிராசன மேய்ப்புக்குழுவின் சபாநாயகர் பதவியிலிருந்து நீங்கி தனது இடத்தில் சாதாரண பொதுநிலையாளன் ஒருவரின் பெயரைப் பிரேரித்தார். இவ்வாறு பதவி பெற்றவர் திரு ரொம் கசி என்பவரே. அக்குழுவின் சபாநாயகர் பதவியிலிருந்து நீங்கிய போதும் அக்குழுவின் தலைவர் அவரே. கருமங்கள் யாவும், எதுவும் தவிர்ப்பின்றி கசி அவர்களின் தலைமையில் அலசி ஆராயப்பட்டது. சாதாரண அங்கத்தவராக பெக் அடிகளார் ஆசனத்திலமர்ந்து தக்கசமயங்களில் தமது புத்திமதிகளை அளித்தார். பெக்அடிகளார் இவ்வாறு செய்ததன் நியாயம், தக்க பொதுநிலையாளர் அங்கு இருந்தால் வத்திக்கான் சங்கமுடிவை அவர் அமுல் நடத்தக்கூடியதாய் இருந்ததே

இத்தாலி-ஸ்ரீலங்கா மக்களின் நட்புறவு

கடந்த 12-ந்தேதி காவத்தையில் மேற்காட்டிய இரு நாட்டு மக்களின் கொடிகள் பறந்தன. நட்பால் பிணைந்த இருஇனமக்கள் ஒருங்கிணைந்திருந்தனர். சுவாமி யன்னக்கோன் இத்தாலிக்கு காவத்தை மக்களின் பிரதிநிதியாகச் சென்றபோது 40,000 ரூபாவை காவத்தை மக்களின நலனுக்காகவும், ஒரு தையல் நிலையத்துக்காகவும் இத்தாலிமக்கள் கொடுத்திருந்தனர். கட்டட நிபுணர் திரு. பிரான்சிஸ் எதிரிசிங்காவின் உதவியுடன் சுவாமி யன்னக்கோன் டெனியாயவிலிருந்துவந்து ஆறு மாதத்திற்குள் கட்டடத்தைப் பூர்த்தி செய்தார். வானவரின் (இரு வதனக்) கன்னியர் பெண்களுக்குத் தையற்பயிற்சி அளிப்பர்.

பாப்பரசரின் நிரதிநிதி வண. கார்லோ கூரிஸ் புதிய கட்டடத்தை மந்திரித்தார். நிவித்திகல மக்கள் பிரதிநிதி திரு. அரிச்சந்திரா கட்டடத்தைத் திறந்து கன்னியரிடம் கையளித்தார். ஒரு குடும்பத்தை உருவாக்க இருஇன மக்கள் உழைத்தனர்.

வைத்தியசாலை

காவத்தை வைத்திய அதிகாரி டக்றர் சலமோன் பாப்பரசரின் பிரதிநிதியை வரவேற்று, 16 படுக்கையில் 60 கர்ப்பிணிப் பெண்கள் இடவசதியின்றி வராந்தாவில் படும் கஷ்டத்தைச் சுட்டிக்காட்டினர்.

ஞான-உலக அதிகாரிகள் தாய், சேய் நலனைப்பற்றிப் பேசுவதும் செய்வதும் ஒன்றாக இல்லாமல் மாறுபட்டதாக உள்ளது வருந்தத்தக்குரியது. ஆயர் கூரிஸ் அவர்களுக்கு அனுதாபம் தெரிவித்தார். இத்தாலி — ஸ்ரீ லங்கா மக்களின் நட்புறவு அதிகதிகமாக கலனையும் நட்புறவையும் உண்டாக்கும்.

போர்த்துக்காலுடன் பரிந்துபேச வத்திக்கான் கேட்கப்பட்டது

உலக சமாதான நீதி நிறுவல் ஆணைக்குழுவில் 11தேச ஐரோப்பியதேச கிறிஸ்தவ சபைகள் அடங்கியிருக்கின்றன. ஆபிரிக்க நாடாகிய மொசாம்பிக்குவேயில் சுயஆட்சி நிறுவுவதற்கு அந்தத் தேசத்தவர் எடுக்கும் முயற்சிகளை முறியடிக்க ஆளும் நாடாகிய போர்த்துக்கால் கையாளும் கொடுமைகளைக் கைவிடும்படி போர்த்துக்காலுக்கு உபதேசம் கூறுமாறு பதினொரு தேசக்குழு விண்ணப்பித்திருக்கிறது. வத்திக்கானுக்கும் போர்த்துக்காலுக்கும் உள்ள நேச உடன்படிக்கையின் காரணமாக வத்திக்கான் கொடுக்கும் உபதேசம் பயனளிக்குமென நம்பப்படுகிறது.

டபிளின் நகரில் ஒரு விசேஷ தினம்

கத்தோலிக்க சமய போதனைகள் மிகவேரூன்றியிருக்கும் அயர்லாந்து தேசத்தில் சென்றவார ஞாயிறு தினம் சரித்திரச் சிறப்பு வாய்ந்ததாயிற்று. ஆங்கில தேசத்தில் சமயப்புரட்சியேற்பட்ட 16-ம் நூற்றுண்டு தொடக்கமாக டபிளின் நகரில் புரொட்டஸ்தாந்து தேவாலயங்களில் வழிபாட்டுக்குக் கத்தோலிக்கர் சென்றதில்லை. ஆனல், முதன் முதலாக சென்ற வாரம் டபிளின் நகர அதிமேற்றிராணியாராகிய றயன் அடிகளாரும் ஜனதிபதி டி வலெருவும் அங்கிள புரொட்டஸ்தாந்து தேவாலயத்தில் நடந்த பொதுப்பிரசைகளின் தேவவழிபாட்டில் கலந்துகொண்டனர். அநேக கத்தோலிக்கர் பிறகிறிஸ்தவ சபையினருடன் சேர்ந்து [illegible]

தெரேசா தாயார் நேருபரிசு பெற்றார்

புகழ்பெற்ற இந்திய தலைவர் ஜவஹார்லால நேருவின் பெயரால் வருடாவருடம் சர்வதேச விளக்கச் சிறப்புக்கு அளிக்கப்பட்டுவரும் பரிசு இவ்வருடம் தெரேசா தாயாருக்கு இந்திய ஜனதிபதி திரு. வி.வி. கிரி அவர்களால் இந்திய தேச தலைநகரில் இம்மாசம் 15-ம் திகதி அளிக்கப்பட்டது. உலக சமாதானத்துக்கும் மக்களின் சேமத்துக்கும் உழைத்துவந்த யூ. தான்ற, மாட்டின் லூதர் முதலியோர் வரிசையில் கணிக்கப்பட்டு தெரேசா தாயார் இவ்வருடம் இப்பரிசு அளிக்கப்பட்டார். வறியவர் மத்தியில் இந்தியாவிலும் உலகின் பல தேசங்களிலும் இவரது சபையினர் சேவை புரிந்துவருவது யாவரும் அறிந்ததே.

தப்பான மதிப்புகள் நாட்டு முன்னேற்றத்துக்குத் தடை

கொழும்பு அதிமேற்றிராசன துணைஆயர் ஒஸ்வல்ட கோமிஸ் அடிகளார் மொறெட்டுவா புனித செபஸ்தியார் பாடசாலை இராப்பள்ளிக்கூட தங்கயூபிலி தினத்தன்று ஆற்றிய சொற்பொழிவில் அப்பள்ளிக்கூடம் வறியவர்கள் மத்தியில் சென்ற பல வருடங்களாகச் செய்துவந்த சேவையைப் பாராட்டினர். "இராப்பள்ளிக்கூட பழைய மாணவர் பலர் இன்று உயர் பதவிகளில் இருக்கின்றனர். செல்வக்குறையினல் காலையில் உழைத்து இரவில் கற்கும் மாணவர்கள் ஊக்கம் உள்ளவர்கள், அவர்கள் பெரும் மதிப்புக்குள்ளவர்கள், கூடியபாராட்டுக்குரியவர்கள் அவர்களே. நாம் மதிப்புக் கொடுக்க வேண்டியவர்களுக்கு அதைக் கொடாதிருப்பது அநீதியாகும். அதனல் நாட்டின் முன்னேற்றத்துக்குத் தடைகள் ஏற்படுகின்றன" — இவ்வாறு பகன்றார் அடிகளார்.

செஞ்சீனவில் திருச்சபை வளர்கின்றதா ?

சமீபகாலத்தில் செஞ்சீன அரசாங்க தலைவர்களும் அதிகாரிகளும் கத்தோலிக்க திருச்சபையுடன் முன்னிலும் சற்று இளக்காரமாக நடந்து வருவதாக அங்காட்டிலிருந்து ஹொங்கோங் தீவுக்கு வந்து சேர்ந்த சில குருமார் கூறியிருக்கின்றனர். சில வருடங்களுக்குமுன் வத்திக்கானும் செஞ்சீனவும் ஒன்றுடனென்று தமது தொடர்புகளிலுள்ள பிணக்குகளை அகற்ற ஆரம்பித்திருப்பினும் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் மிகச்சிலவே. ஷாங்காய் நகரிலும் கான்ரன் நகரிலும் இருஆலயங்கள் கத்தோலிக்க வழிபாடுகளுக்கு மீளவும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. இத்தகவல்கள் வத்திக்கானே, சீனஅதிகாரிகளோ கொடுக்கவில்லை. ஆகவே உண்மையில் அங்குள்ள நிலைமை தெளிவாகத் தெரியாவிடினும் உறவுவளர்ந்துவருவதாக நம்பப்படுகிறது.

தோட்டத் தொழிலாளருக்கு உதவ ஒரு சமூக சேவா நிலையம்

இரத்தினபுரி அவிசாவலைப் பகுதியில் கஹாவித்தக்கிராமத்தில் சென்ற வாரம் ஒரு சமூகசேவா நிலையம் பாப்பரசரின் இங்காட்டுத் தூதுவர் கார்லோ கூறிஸ் அடிகளாரால் திறந்து வைக்கப்பட்டது. இந்தச் சமூக சேவா நிலையம் அப்பகுதிக் கிராமவாசிகளுக்கும் சூழஇருக்கும் தோட்டத் தொழிலாளருக்கும் பெரும் பயனுக விளங்குமென்பது திண்ணம். பலவகையான தொழிற்பயிற்சி அளிக்கப்படுவதுடன் அங்கு ஒரு நூல்நிலையமும் நிறுவப்பட்டுள்ளது. இத்தாலிய தேசத்தூதுவர் இங்நிலையத்துக்குப் பலவகை உதவிகளும் புரிய உறுதி கூறியுள்ளார்.

ஆங்கில தேசத்தவருக்கு 6-ம் சின்னப்ப பாப்பரசரின் செய்தி

சில தினங்களுக்குமுன் ஆங்கில நாட்டுக்குச்சேர்ந்த 5மேற்றிராணிமார் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்ப பாப்பரசரை வழக்கமாக ஆயர்மார் 5 வருடங்களுக்கு ஒருமுறை செய்யும் பாப்பரசர் தரிசனத்தைச் செய்யச் சென்றிருந்தனர். 5ஆயர்மாரும் ஒருங்கு சென்ற ஒரு தருணத்தில் அவர்களின் மூலமாக ஆங்கில மக்களுக்கு ஒரு செய்தியை அனுப்பியருளினர். தேவன் வெளிப்படுத்திய உண்மைகளை ஆங்கிலமக்கள் ஆவலோடு ஏற்றுக்கொண்டு, இக்கால போக்குக்களினல் அவ்வுண்மைகளை மங்கவிடாது காத்துவர வேண்டுமென்பதே அச்செய்தியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> முட்டாளின் இருதயம் அவன் வாய்க்குள் இருக்கிறது; ஆனால், புத்திசாலியின் வாயோ அவன் இருதயத்துக்குள் இருக்கிறது.
>
> —பெஞ்சமின் பிருங்ளின்

சத்தியவேத பாதுகாவலன்

புனிதர் காட்டிய வழி

பிறர் தவறு செய்தால் அதைப் பார்த்துக் கொண்டிருப்பவருக்குக் கோபம் வருவது இயற்கை. ஆயினும் அக்கோபத்தை அடக்கி அன்பு மொழிகளால் அவர்களைத் திருத்த முயல்வதுதான் அறிவுடைமையாகும். புனித பிரான்ஸிஸ் டி சேல்ஸ் அடிக்கடி பின்வருமாறு கூறுவாராம்: "பச்சையான வாதுமைக்கொட்டை மிகவும் கசப்பானது ஆனால், தித்திப்பூட்டப்பட்டால் அதுவே மிகச் சுவையுள்ளதாய் மாறுகின்றது. அது போலவே திருத்தங்களும், கண்டனங்களும் மனதுக்கு வெறுப்பாக இருக்கின்றன. ஆனாலும் அன்பும் கனிவும் அவற்றோடு சேரும்போது மனதுக்கிசைந்தனவாய் பன்மடங்கு பயனளிக்கக் கூடியனவாய் மாறுகின்றன." இப்புனிதர் தமது அன்பினாலும், கனிவான சுபாவத்தாலும் தாம் விரும்பிய யாவற்றையும் பெறக்கூடியதாயிருந்தது. மிகக் கடின இருதயம் படைத்த பாவிகளைக் கூட அவர் இறைவன் திருப்பாதத்திற்கு அழைத்து வருவதில் வெற்றிகண்டார்.

இவரைப் போன்றே புனித வின்சென் டி போலும் கனிவையும் பரிவையும் கண்ணெனப் போற்றியவர். தமது சபையை நிர்வகித்து வருகையில் எவரையும் கடுமையாகக் கண்டிப்பதை அவர் கூடியமட்டும் தவிர்த்து வந்தார். தமது கடமையை நிறைவேற்றும் பொருட்டு மூன்றே தடவைகள் அவர் கடுமையாக நடந்து கொண்டதாகவும், அம்மூன்று முறையும் சம்பந்தப்பட்டோர் திருந்தவில்லையென்றும், அன்போடு அறிவுரை கூறியபோதெல்லாம் தமது முயற்சி வெற்றி அளித்ததாகவும் அவரே கூறியிருக்கிறார்.

அன்பிற்கும் தாழ்மைக்கும் அதிக சக்தி உண்டு. உள்ளங்களைக் கவர்வதற்கும், இயற்கையில் வெறுப்பாயிருக்கும் காரியங்களை உவப்புடன் ஏற்கும்படி செய்வதற்கும் அன்பிற்கு நிகரான உபாயம் வேறு இல்லை. மிகக் கடின உள்ளம் படைத்தவர் என்று பேர்பெற்ற பாவிகள் பலர் ஒரே ஒருவரின் கனிவான செயலால் மனந்திரும்பிய வரலாறுகள் ஏராளம்.

ஆகவே, எமது கடமை எங்கும், எப்போதும் எல்லோரிடமும் இனிமையாக நடந்து கொள்வதாகும். சிலர் தமதெண்ணப்படி எல்லாம் நடக்கும்வரை இசைவாக இருப்பார்கள். ஆனால், ஒரு எதிர்ப்போ இடையூறோ வந்ததும் எரிமலை போல் கொதித்தெழுவார்கள். இவர்களை நீறு பூத்த நெருப்பு என்று சொல்லலாம். இவர்களது கனிவு வெறும் வேடமேயன்றி உண்மையான ஒரு புண்ணியமல்ல.

புனிதத் தன்மையை அடைய விரும்புவோர் முட்களின் நடுவிலுள்ள மலரை ஒத்திருக்க வேண்டும். எவ்வளவு தான் முட்களால் குத்தப்பட்டாலும் அம்மலர் தன் மென்மையை இழந்து விடுவதில்லை; அது முட்களைப் பழிவாங்க முயலுவதில்லை. அது போலவே பிறர் எம்மை எவ்வாறு பழித்தாலும், துன்புறுத்தினாலும் நாம் எமது அமைதியை இழத்தலாகாது. கடுஞ்சொற்களாலும், செயல்களாலும் என்று வெல்ல எண்ணுகிறோமோ அன்று தோல்வியே கிட்டும். இறைவனை நேசிப்பவன் தன் உள்ளத்திலும் முகத்திலும் அமைதியை உடையவனாயிருக்க வேண்டும். நிலைமை தனக்குச் சாதகமாயிருந்தாலும் பாதகமாயிருந்தாலும் தன்னை அடக்கி ஆளவும் பிறர்மீது பரிவுகாட்டவும் பழக வேண்டும்.

பத்திமா திருப்பதியில்
கருதினல் மின்சென்ரி

1917-ம் ஆண்டு போர்த்துக்கால்தேச பத்திமா தலத்தில் தேவதாயார் 3 சிறுவர்களுக்குக் காட்சி அளித்த தினத்தின் 55-ம் ஆண்டு நிறைவு கருதினல் மின்சென்ரி அடிகளாரின் தலைமையில் அன்னையின் பக்தர்கள் சுமார் 250 000 பேர் சமுகத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. கொண்டாட்டத்தின் சில தினங்களின் பின் மின்சென்ரி அடிகளார் அச்சிறுவர்களில் ஒருவராகிய சங்கைக்குரிய லூசிக் கன்னியாஸ்திரியை அவர் வதிந்துவரும் கார்மேல் மௌன சபைக்குச் சென்று தரிசித்துக்கொண்டார். லூசி அடியாளுக்கு இன்று 72வயதாகி விட்டது. திருப்பதியின் விஜயத்தின்பின் மின்சென்ரி அடிகளார் தான் இப்போது வசித்துவரும் அவுஸ்திரியதேச பட்டணத்துக்குச் சென்றுவிட்டார். மனத்துன்பம் நிறைந்த இந்த நாட்களில்தனக்குக்கிடைத்த ஆறுதல்களில் ஒன்றாக இவ்விஜயம் இருப்பதாக அடிகளார் கூறியிருக்கிறார்.

விதவையின் விசுவாசம்!

(அ, காணிக்கராஜ், பெங்களூர்)

1867-ம் ஆண்டில் பாரிஸ் மாநகரில் சிறந்த நல்லொழுக்கமும், தெய்வபக்தியும் ஒருங்கே பெற்ற ஒருமாது, இளவயதிலேயே தன் கணவனை இழந்து இருமக்களோடு விதவையானாள். வேறொருவருடைய ஆதரவின்றி தத்தளித்த அவள், தன் இரு அருஞ்செல்வங்களைக் காப்பாற்ற இப் பரந்த உலகிலே பிழைக்கும் வழியைத் தேடிச் சென்றாள். அங்குமிங்கும் வேலை, வேலையென்று அலைந்து இறுதியில் ஒரு செல்வந்தர் வீட்டிலே வேலைக்காரியாக உழைக்க வாய்ப்பு ஏற்பட்டது. இதைக்கொண்டு தன் வாழ்க்கையை ஒருவாறு நடத்திச் சென்றாள்.

மாண்ட தன் மணாளனை மீண்டும் மறுவுலகில் காண முடிவுசெய்தவள்போல், அவள் மனதிலே ஓர் அரிய திட்டம் உதித்தது. மரித்தவர்களுக்காக அனுதினமும் மறவாது ஆண்டவரிடம் மன்றாடி வரவேண்டுமென்பதே. எனவே, மாதந்தோறும் தனக்குக் கிடைக்கும் வருவாயில் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காக ஒரு பூசை செய்வித்து ஒப்புக்கொடுத்து வந்தாள். இதுவே உடைந்த அவள் உள்ளத்திற்குப் பேராறுதல் அளித்துவந்தது. இவ்வாறு ஆண்டுகள் சில உருண்டோடின.

ஆனால், துன்பமென்னும் புயல் அவளைச் சும்மா விட்டுவிடவில்லை. மீண்டும் அவள் வாழ்க்கைப்படகைச் சற்றுத் தத்தளிக்க வைத்தது. திடீரென்று கண்ட கடுங் காய்ச்சலால் அவள் உடல்நலங் குன்றிப் பலநாள் படுக்கையாய்க் கிடந்து பெரும் பாடுபட்டாள். தன் மக்களுக்கென ஒதுக்கிவைத்த பணத்தையெல்லாம் மருத்துவ சிகிச்சைக்காகச் செலவழித்தாள். இந்நிலையில் பொருளை மட்டுமல்ல; குடும்பத்தைக் காப்பாற்றப் பெருந்துணையாயிருந்த தன் வேலையையும் பறிகொடுத்தாள். 'பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்' என்பதை முற்றும் உணர்ந்தவளாதலால், தேவ சித்தத்திற்கமைந்து பொறுமையைக் கடைப்பிடித்தாள்.

தன் துன்பதுயரங்களனைத்தும் உத்தரிக்கிற ஆத்துமங்கள் வேதனை குறையும்படி ஒப்புக்கொடுத்தாள். பக்கத்துணையின்றிப் பரிதவித்த அவளுக்கு ஆறுதலளிக்கவோ, அவளைக் கைதூக்கி ஆதரிக்கவோ ஒருவருமில்லை. இது போல் அன்றுமட்டுமல்ல, இன்றும் நம்மிடையே எத்தனையோ விதவைகள் இன்னலுறுகிறார்கள். இதைக் கண்டும் காணாததுபோல் உல்லாச வாழ்வில் உண்டு களித்திருப்பவர்கள், ஈவு இரக்கமற்றவர்கள், பிறர்சிநேக பண்பற்றவர்கள். இரும்புபோன்ற இளகாத இதயம் படைத்தவர்கள் இருக்கும் வரையில் ஏழைகளின் வாழ்வு இருளடர்ந்தே கிடக்கும். தெய்வாதீனமாய் அவ்வேழை விதவையின் மகன் [illegible] பிழைப்பைத் தேடிச்செல்ல நேர்ந்தது.

தேடித்தேடி அலைந்தாள்; ஆனால், ஒரு வேலையும் கிட்டவில்லை. என்ன செய்வதென்று ஏங்கினாள். ஒருநாள் வழக்கம்போல் வேலைதேடிச் செல்லும்போது வழியிலிருந்த புனித இஸ்தாக்கியாருடைய கோவிலைச் சந்திக்கச் சென்றாள். கோவிலில் குருவானவர் உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காகத் திவ்வியபூசை ஒப்புக்கொடுத்திருப்பதைக் கண்டு, அவள் கண்களில் கண்ணீர் ததும்பியது. உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு மாதந்தோறும் தவறாமல் பூசை செய்வித்து ஒப்புக்கொடுத்துவந்த சுகிர்த வழக்கம் தடைப்பட்டு விட்டதேஎன்று வருந்தினாள்.

அன்று அவள் பிழைப்புக்காகத் தன்பையில்வைத்திருந்தது இரண்டே இரண்டு ரூபாய். இதைக்கொண்டு ஏன் ஒரு பூ[illegible] செய்விக்கக் கூடாது என்ற எண்ணம் உதித்தது. ஆனால் பிழைப்புக்கு என்ன செய்வதென்று தயங்கினாள். சர்வேசுரனிடத்தில் முழு நம்பிக்கை வைத்துக் கோவில் வெளியே சென்ற குருவை அணுகி: "சுவாமி, உத்தரிக்கிற ஆத்துமங்களுக்காக ஒரு பூசைசெய்விக்கஆசிக்கிறேன். ஆனால் என் கையில் தற்போது இருப்பது இரண்டுரூபாய் தான். இதை ஏற்று எந்த ஆத்துமம் மோட்சத்துக்குச் செல்லும் தறுவாயில் இருக்கிறதோ, அந்த ஆத்துமத்துக்குப் பூசையை ஒப்புக்கொடுங்கள்" என்று வேண்டினாள். குருவும் அவள் விருப்பத்திற்கிணங்கி கோவிலில் திருப்பலிப் பூசையை நிறைவேற்றினார்.

பூசை முடிந்தபின் அவ்விதவை ஒரு வீதியில் சென்றுகொண்டிருக்கும்போது உயர்குலத்தில் பிறந்த வாலிபனொருவன் மேரை மரியாதையுடன் தன்எதிரேவருவதைக் கண்டாள். அவ்வாலிபன் அவளண்டை வந்ததும் அவளுக்கு வணக்கம் கூறி, "அம்மா நீ பிழைப்பைத்தேடிக்கொண்டிருக்கிறீரல்லவா? அதோ அந்த மூன்றும்வீதிக் கோடியில் இந்த எண்ணுள்ள வீட்டில் ஆள் தேவை; அங்கு செல்லுங்கள். உங்களுக்குக் கண்டிப்பாய் வேலை கிடைக்கும்" என்று கூறிவிட்டு வீதியில் நடமாடும் ஜனக்கும்பலில் நுழைந்துமறைந்துபோனான்.

இதைக் கேட்டதும் அவள் முகத்தில் ஆனந்தக்குறி தோன்றியது. உடனே ஓடினாள் வீட்டைத்தேடி. அவ்வாலிபன்கூறிய மூன்றும்வீதி கோடியில் குறித்த எண்ணுள்ள வீட்டை அடைந்து கதவைத் தட்டினாள். ஒருசீமாட்டி கதவைத்திறந்து, "உள்ளே வா" என்றழைத்து, "உனக்கு என்ன வேண்டும்" என்று கேட்டாள். "அம்மா நான் ஒரு விதவை; வேலையில்லாமல் என் இரு மக்களைக் காப்பாற்ற வழியின்றித் தவிக்கிறேன். இங்கு வேலைக்கு ஆள் தேவை என்றறிந்துவந்தேன். என்னை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்றாள். இதைக் கேட்டதும் சீமாட்டிக்கு ஒரே திகைப்பு ஏற்பட்டது. "என்ன, ஒருமணி நேரத்திற்கு முன்புதான் என்னிடமிருந்த வஞ்சனையும், திருட்டுத்தனமுமுள்ள வேலைக்காரியைவேண்டாமென்று விலக்கிவிட்டேன். இது எனக்கு மட்டும் தான் தெரியும். உன்னை இங்கு அனுப்பியது யார்?" என்று கேட்டாள். அதற்கந்த விதவை, "நான் வீதியில்போய்க்கொண்டிருக்கும்போது என் எதிரே வந்த வாலிபன் ஒருவன் என்னை இங்கு அனுப்பினான்" என்று பதில் சொன்னாள். சீமாட்டிக்குப் பிரமிப்பு அதிகரித்தது. "வாலிபனா! யார் அவன்? எப்படி இருக்கிறான்? இவ்விஷயம் அவனுக்கு எப்படித் தெரியும்?" என்று மீண்டும் கேட்க, விதவை தான் தெருவில்கண்ட வாலிபனின் அழகையும், அடையாளத்தையும் ஒருவாறு விபரித்துக் கூறியவண்ணமாக இருக்கையில், அந்த அறையின் சுவரில் தொங்கவிட்டிருந்த ஒரு புகைப்படம் அவள் கண்களைக் கவர்ந்தன. உடனே அவள், "அம்மா, அம்மா! இந்தப் படத்திலுள்ள சாயல் அவ்வாலிபனைப் போல் இருக்கிறது. ஆமாம், அவனேதான்!" என்று திட்டவட்டமாகக் கூறினாள்.

இதைக் கேட்டமாத்திரத்தில் சீமாட்டி மெய்மறந்து கண்கள் சுழல தடுமாறினாள். சற்றுநேரத்துக்குப் பின் உரத்த சத்தமாய், "இவனா! இவன் எனது ஒரே மகன். அவன் இறந்து இரு ஆண்டுகளாயின. நீ அவனை நிச்சயம் கண்டாயா? எப்படி? என்ன நடந்தது? எனக்கு விளக்கமாய்ச் சொல்" என்று கேட்டாள். விதவை தன் வரலாற்றைச் சுருக்கமாகக் கூறி, தன் கஷ்டத்தையும், அன்று தன்னிடத்திலிருந்த இரண்டு ரூபாய்களைத் தந்து மோட்சத்திற்கேகும் தறுவாயிலுள்ள ஆத்துமத்திற்குத் திருப்பலிபூசை செய்வித்து ஒப்புக்கொடுத்ததையும், வீதியில் வாலிபனைச் சந்தித்ததையும் தெளிவாக எடுத்துச் சொன்னாள். சீமாட்டி ஆனந்தக் கடலில் மூழ்கி நீ செய்வித்த பூசையினால் நிச்சயம் என் மகன் மோட்ச பேரின்பம் அடைந்திருப்பான். இதற்கு நான் உனக்கு என்ன கைம்மாறு செய்யக்கூடும். நீ வேலைக்காரியாக அல்ல என் மகனுக்குப் பதிலாக என் மகளாக உன் இரு மக்களுடன் இவ்வீட்டில் என்னோடு இரு" என்று அவளைக் கட்டி அணைத்தாள். விதவை தனக்குக் கிடைத்த பாக்கியத்திற்காக இறைவனுக்கு நன்றிகூறி உத்தரிக்கிற ஆத்துமாக்களுக்காக முன்னிலும் அதிகமாக ஜெபித்தும் பூசைகளை ஒப்புக்கொடுத்தும் வந்தாள்.

இரக்கமுள்ளவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

நன்றி; சத்தியசுடர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூட்டிய அறையில்.....

எம். ஜோர்ஜ் ராஜேந்திரன்,
புனித சவேரியார் கல்லூரி, நுவரெலியா.

(முன் தொடர்ச்சி)

பூசைவேளையில் அவரை நன்கு கவனித்தேன். ஒன்றும் தெரியாத அப்பாவியைப் போல் இருந்தார். அவர் அன்று வைத்த பிரசங்கம் என்னைக் கொஞ்சம் சிந்திக்கத் தூண்டியது. அவர் எனக்காகத்தான் அந்தப் பிரசங்கம் வைத்தார் என்றும் எண்ணினேன். அந்தப் பிரசங்கத்தின் சுருக்கம் இதுதான் :

''இந்த உலகம் ஒரு நாடக மேடை. இதில் நாமெல்லாம் நடித்துக்கொண்டிருக்கிறோம். நாம நடித்துக் கொண்டிருக்கும் நாடகக் கதையை எழுதுபவர் கடவுள் ஆவர். அவருக்கு இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்ற மூன்று அங்கங்களுடைய நாடகத்தின் கதை நன்றாகத் தெரியும். அவர் எல்லாம அறிந்தவர். அவர்தயாரித்த நாடகம்தான் நடித்துக் காட்டப் படுகிறது. அக்கதையை அறிந்துகொள்ள முடியாமல் நடிகர்களும், ரசிகர்களும் குழப்பத்தில ஆழ்ந்துள்ளனர். ஒரு காட்சியைக் கொண்டு முழுக்கதையையும் கூற முடியாதலலவா? கதையைத் தெரிந்துகொள்வதற்கு முழு நாடகத்தையும் தெரிந்துகொள்ள வேண்டும்.''

இப் பிரசங்கத்தைக் கேட்ட பிறகு எனக்கு இப்படியும் சிந்திக்கத் தோன்றியது. ஒருவேளை அவர் கைக்குட்டையை எடுக்கவந்தபொழுது நான் அந்த அறையிலிருந்து ஓடுவதைக் கண்டிருப்பார். என்னுல் அவருக்கு ஏதாவது தீங்கு நேருமென்றுதான் இப்படியொரு பிரசங்கத்தை வைத்து என் மனதை மாற்ற முயலுகின்றார் என்று நினைத்தேன்.

எவ்வளவு நன்றாகப் பேசுகிறார்; எப்படியான வரையும் மயக்கிவிடும் இவ்வளவு அரிய கருத்துக்கள் இவரிடத்தில் எப்படித் தோன்றுகின்றது. வாயில் தேனிருக்கும் தேனீயிடம் தானே கொடுக்கில் விஷமும் இருக்கிறது. இப்படிப் பல வகையான எண்ணங்கள் என் உள்ளத்தில் அலைமோதிக் கொண்டிருந்தன.

அந்தப் பிரசங்கத்தைக் கேட்டபிறகு என் தீர்மானம் சிறிது தளர்ச்சியடைந்தது. பொறுத்திருந்து பார்த்து மீண்டும் அதேவிதமான சம்பவம் நடந்தால்ஏதாவது முடிவு செய்யலாம்என்று பேசாமல் இருந்தேன். அந்தச் சம்பவத்திற்குப்பிறகு அந்தப் பூட்டிய அறையின் எதுவித அசம்பாவிதமும் ஏற்படவில்லை.

ஆனல் குருவானவர் படுக்கப் போகுமுன் என் அறைக்கும் அவரின் படுக்கை அறைக்கும் நடுவிலுள்ள அந்த வெள்ளைநிறக் கதவைத் தினந்தோறும் பூட்டிவிட்டுச் செல்வதை மறக்கவில்லை. இதன் மர்மம் தான் எனக்கும் தெரியவில்லை. அந்தக் கதவைமட்டும் திறக்க முடிந்தால் இரவில் அந்த பூட்டிய அறையில் என்ன நடக்கிறதென்று இலகுவில் கண்டு பிடித்து விடலாம். அதற்கு என்ன செய்வது? அந்தக் கதவுக்கு மாற்றுச்சாவி ஒன்று இருக்கத்தானே வேண்டும்என நினைத்து எல்லா அலமாரிகளையும், பெட்டிகளையும் திறந்து பார்த்தேன் நான் நினைத்தது போலவே ஒரு சிறிய பெட்டியில் அந்தக் கதவுக்குரிய மாற்றுச்சாவி இருந்தது. அதை எடுத்துப் பவுத்திரமாக வைத்துக்கொண்டேன். மீண்டும் அந்த அறையில் ஏதாவதுசம்பவம் நடக்குமென்று எதிர்பார்த்துக் காத்திருந்தேன்.

ஒருநாள் இரவு மீண்டும் முன்பு நான்கேட்ட அதே ஒலிகள் அந்த அறையிலிருந்து எழுந்துவரத் தொடங்கின. இம்முறை அந்த ஒலிகளை என்னுல தெளிவாகக் கேட்கமுடிந்தது. இச் சப்தங்களைக் கேட்டதும் என் உடம்பிலிருந்த நரம்புகளெல்லாம் புடைத்தெழுந்தன. இரத்தம் கொதிக்கத் தொடங்கியது. அந்தவெள்ளை நிறக் கதவருகேசென்று மாற்றுச் சாவியைக் கொண்டு கதவைத் திறந்தேன், நேராக அந்தப் பூட்டிய அறையை நோக்கிச் சென்றேன். இன்னும் விசித்திரமான [illegible]லிகள் எழுந்துகொண்டே இருந்தன. அறையினுள் விளக்கும் எரிந்துகொண்டே இருந்தது. இலேசாகக் குனிந்து கதவின் திறப்புத் துவாரத்தினூடாக உள்ளே பார்த்தேன். அந்தக் காட்சியைப் பார்க்க முடியாமல் என் கண்கள் கூசின. என் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது. இதயம் நின்றுவிடுமோ என்றுகூட நினைத்தேன்.

குருவானவர் இடுப்பில்மட்டும் மெல்லிய வெண்மையான ஒரு வஸ்திரம் அணிந்திருந்தார். அவர் உடம்பெல்லாம் இரத்தமயமாகக் காட்சியளித்தது. அவர் அணிந்திருந்த வெண்ணிற வஸ்திரம் செந்நிறமாகிக்கொண்டிருந்தது. கொக்கிகள் இணைக்கப்பட்ட சவுக்கு அவரது வலதுகையிலே இருந்தது. அவர் யாரையோ சவுக்கால் அடிக்கிறார் எனநினைத்து அவருக்குமுன்னுல் யாராவது இருக்கின்றார்களா என்று பார்த்தேன். ஒருவரையும் காண முடியவில்லை. அவர்கையிலிருந்த சவுக்கு ஒருமுறை சழன்றது. அது சுழலும்பொழுது வளையல்கள் குலுங்குவதைப் போன்ற ஒலி எழுந்தது. சுழன்ற சவுக்கு வேகமாகவந்து அவரது உடலையே தாக்கியது. கூரிய கொக்கிகள் அவரின் அங்கங்களின் சதையில் கொளுவிக் கொண்டன. மீண்டும் அவர் சவுக்கை இழுத்து எடுத்த பொழுது கொக்கிகள் சதையைக்கிழித்துக்கொண்டு வெளியே வந்தன. இரத்தம் பீறிட்டுப் பாய்ந்து அருகில் இருந்த கட்டில் விரிப்பை நனைத்தது. குருவின் கண்களில் இருந்து கண்ணீர் கலங்கி அவர் முகத்தை நனைத்தது. வேதனையால் அவரின் வாயில்இருந்து பல வித விசித்திர ஒலிகள் எழுந்தன. கூடவே ஓர் இளம் பெண் அனுங்குவதுபோன்ற ஒலியும் அவர் வாயிலிருந்து கிளம்பியது.

சவுக்கு அவரின் உடலில் ஒவ்வொருமுறை பதியும்பொழுதும் அவர், ''ஆண்டவரே என் பாவங்களைப் பொறுத்தருளும்; ஆண்டவரே இவ்வுலக மக்களின் பாவங்களைப் பொறுத்தருளும்'' என்று அழுகையோடு வேண்டிக்கொண்டார். இந்த அகோரக் காட்சியைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாமல் முன்னுலிருந்த படம் கூட—கிறீஸ்து பூங்காவனத்தில் இரத்தவியர்வை வியர்க்கும படம்கூட அழுவதைப் போல் தெரிந்தது.

இக்காட்சியைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க முடியாமல் அவ்விடத்தைவிட்டு என் அறைக்கு ஓடினேன். கட்டிலில் விழுந்து அழுதேன், அழுதேன், அழுதேன்; கட்டிலில் என் தலையை மோதிக் கொண்டு அழுதேன். இப்படி எவ்வளவுநேரம் அழுதேனே எனக்கே தெரியாது.

தனக்காகவும், இவ்வுலக மக்களின் பாவங்களுக்காகவும் தன்னையே சிறிதுசிறிதாக அழித்துக்கொள்ளும் இவ்வளவு பெரிய உத்தமரை, பரிசுத்தவானைச் சந்தேகப் பட்டேனே பாவி என்று என்முகத்தில் அறைந்துகொண்டேன். நாம் சிரித்துச் சிரித்துச் செய்யும் பாவங்களை இவர் அழுது அழுது தீர்க்கிறரே; இவரிலா நான் சந்தேகப்பட்டேன். குருவான

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

அப்பா! நீ எப்போ வருவாய்....?

(பி. ஜேசுருஜா, திருச்சி குருமடம்)

கடல் கடந்து சென்று, பல நாடுகளிலுமுள்ள குருத்துவக் கல்லூரிகளில் தமது புதல்வர்கள் குருத்துவப் பயிற்சி பெற்று, தாயகம் திரும்பிவந்து பயிற்றவைகளைச் சாதனையில் காட்டவேண்டுமென்பதே எமது அன்புத் தந்தையின் அவா. இவ்வித அவரது எண்ண அலைகள் வீணுகப் போனவையா? இலலவே இல்லை. வருடாவருடம் விதைகளை விதைத்துக் கனிகளைப் பெற்றவண்ணமாகவே இருந்தார் எமது ஆருயிர்த் தந்தை. கடல், மலைகளுக்கப்பால் நாம் இருந்தபோதிலும் அவர் எம்மை மறந்தவரா? ஒருபோதும் இல்லை. மடல்கள் வரைந்தோ அன்றேல் தமது வருகையைத் தந்தோ தமது அன்பைப் பரிமாறிக் கொண்டே இருந்தார் எம் அன்புத் தந்தை.

வழக்கம்போல் எமது பாடங்களைப் படித்துக் கொண்டும், மற்றக் கருமங்களைச் செய்து கொண்டும் இருந்தோம் நாம் எமது புனித சின்னப்பர் குருத்துவக் கல்லூரியில். அதிபர் அழைக்கின்றார் என்று பையன் ஒருவன். அவ்வழைப்புக் கிணங்கி அவரது இருப்பிடம் நாடினுர் பன்னிருவராகிய எம்மில் ஒருவர். என்ன விந்தை இது! அதிபரது அறைவாசலை அடைந்ததும் அவரது கரங்களிலே தந்திமடல் ஒன்று தவழ்ந்து கொண்டிருப்பதைக் கண்ணுற்ருர் எமது அன்பர். ஐயோ பாவம்! பயந்தார்!! வியப்படைந்தார்!!! அத்தந்தி எங்கிருந்துவந்துள்ளது என்று கேட்கவோ, அன்றேல் அம்மடல் என்ன செய்தியைத் தாங்கி வந்துள்ளது என்று வினு எழுப்பவோ அவரது நாவு எழவில்லை. மரம்போல் மலைத்துப்போய் நின்ருர். புன்முறுவலுடன் அதிபரது அறைவாசலில் தோன்றிய வதனம் மங்கிக் காட்சியளித்தது. ஆனல், அதிபரது முகமோ மகிழ்ச்சியால் மதிமயங்கிக் காணப்பட்டது. தமது கையிலிருந்த தந்தியை எம் சகோதரரிடம் கொடுத்தார் அதிபர். அதை வாங்கி அவசர அவசரமாகப் படித்தார் எம் சகோதரர். என்ன ஆச்சரியம்! மங்கிக்கிடந்த முகத்திலே மகிழ்ச்சிக் குறிகள் தென்பட்டது. ஆனந்தத்தில் மூழ்கியவராய் நின்ருர் ஒரு சில விநாடிகள். அதில் என்ன எழுதப்பட்டிருந்தது என்பதை அறிய விரும்புகிறீர்களா?

''நான் நாளை திருச்சி வருகிறேன்'' என்ற பொன்வார்த்தைகளே அத்தாளில் பொறிக்கப்பட்டிருந்தன. ஆகா என்ன மகிழ்ச்சி. என்ன ஆனந்தம். கையிலே தந்தித்தாளைக் கொண்டவராய் ஓடோடி வந்தார் எம்மை நோக்கி எம் சகோதரர். அவரோடு சேர்ந்து நாமும் அத்தாளை பன்முறை படித்து மகிழ்ந்தோம்.

நாளையும் வந்தது. அந்நாள் சாதாரண நாள் அல்லஎமக்கு. பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நன்னுள் அது. எம் அன்புத்தந்தையை வரவேற்பதற்காக எல்லோரும் திருச்சி விமான நிலையத்துக்கு விரைந்து சென்ருேம். ஆகாயத்தைப் பார்த்த வண்ணமாகவே நின்ருேம். அதோ, விமானமொன்று திருச்சி விமான நிலையத்தை நோக்கிப் பறந்துவந்து கொண்டிருந்தது. ஆம், அதுதான் நாம் எதிர்பார்த்த விமானம்.

ஒரு சில விநாடிகளில் விமானம் தரையிலே தவழத்தொடங்கியது. விமானம் நின்றதும் கண்ணிமை வெட்டாது விமான வாசலைப் பார்த்தவண்ணமாகவே நின்ருேம். கதவு திறக்கப்பட்டது. பிரயாணிகள் ஒருவர்பின் ஒருவராக இந்திய மண்ணிலே கால் ஊன்றத்தொடங்கினர். எம் தந்தை எங்கே என்ற வினு எம் மனதிலே எழுந்தது. அதோ ஒருவர் வாசலிலே தென்பட்டார். அவர் யார்? அவர்தான் எம் அன்புத் தந்தை. அதன்பின் எமக்கிருந்த மகிழ்ச்சியைக் கூறவும் வேண்டுமோ? சூரியனைக் கண்ட தாமரை மொட்டுக்கள் விரிந்து மகிழ்வதுபோல தந்தையைக் கண்ட மைந்தர்கள் மகிழ்ச்சி யடைந்தோம். விமான அலுவலகத்துள்ளே தமது கருமங்களை முடித்துக் கொண்டு அலுவலகத்தை விட்டு வெளியே வந்தார் எம் தந்தை. தம் புதல்வர்கள் தம் வருகைக்காகக் காத்துக் கொண்டு நிற்பதைக் கண்டு பூரிப்படைந்தவராய் வழக்கம் போல புன்முறுவலுடன்- ''கோட் பிளஸ் யு மை டிய சில்றன் (God bless you my dear children,) எல்லோரும் சுகமா இருக்கிறீர்களா? எல்லாருமா வந்தநீங்க? பாவம், களைப்பாயில்லையா? வெய்யில் சுடலியா? என்னத்தில வந்த நீங்க?

''வாடகைச் சைக்கிள்களில் வந்தநாங்க மைலோட்-'' (my lord).

''பாவம், சரியான வெய்யிலாயிருக்கே. ஒன்று, இரண்டு, மூன்று.........பதினென்று, என்னடாப்பா ஒரு ஆள் குறைவாயிருக்கு?'' ''அவருக்கு இண்டைக்குப் பரீட்சை இருக்கு மைலோட்.''

''ஐயோ பாவம். அவருக்காக மன்றுடின நீங்களா? எங்க சைக்கிள்கள் எல்லாம்? தனித்தனி சைக்கிளிலேயா வந்த நீங்க? (சிரித்தபடி) அல்லாவிட்டா பொலிஸ்காரன் பிடித்துப் போடுவானே டாப்பா.'' ......''சரி தம்பிமாரே, நான் செமிநெறிக்குப்போறன். நீங்க வாங்க ஆறுதலா. (சிரித்துக் கொண்டே) வெய்யில் இல்லாத ருேட்டால் வாங்கடாப்பா.''

இவ்வாறுக எம் தந்தை ஒரு சில நிமிடங்கள் எம்மோடு பேசிவிட்டு அவருக்காகக் காத்துநின்ற வாகனத்திலே குருமடம் நோக்கி விரைந்தார். அவரைப் பின் தொடர்ந்தோம் நாம். குருமடத்தினுள்ளே நுழைந்தவுடன் முதன் முதலாக நாம் கண்டது யாரை? எமது அதிபரையா, அன்றேல் எமது மற்றச் சகோதரரையா? இல்லை, இல்லை. நாம் கண்டது எமது அன்பு அப்பாவைத்தான். நாம் அவருக்காகக் காத்து நிற்பதற்குப் பதிலாக அவர் எமது வருகையை எதிர்நோக்கி நின்றதாகத் தெரிந்தது.

அவரை அண்டினேம். சிரித்துக்கொண்டே.

''எல்லாரும் வந்திற்றீங்களா சுகமாக? களைச்சுப் போனீங்களா? பொலிஸ்காரனிட்டப் பிடிபடவிலாயாடாப்பா?''

''ஒரு சைக்கிளைப் பிடித்துப் போட்டான் மைலோட்.''

(சிரிப்போடு) ''சரியாப் போச்சு, நான் இல்ல...எனக்குத் தெரியாது...எனக்குத் தெரியாது....நான் இல்ல..., பொலிஸ்காரனுக்கும வேலை வேணுந்தானே. அல்லாவிட்டா அவன் சும்மா நிக்கணுமே இந்த வெய்யிலில். ஏன பிடிச்சான்.''

''அந்தச் சைக்கிளில் நம்பர் இல்ல மைலோட்.''

(சிரித்துக்கொண்டே)''அப்ப அது உங்க பிழை இல்ல. அது சைக்கிள் கடக்காரன்ற பிழை. உங்க பிழை இல்ல......உங்க பிழை இல்ல..., சரி தம்பிமாரே, போய் கையக் காலைக் கழுவிற்று வாங்க கதைப்போம்.''

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைஞர் உலகு

அன்புச் சோதரரே!

பாடசாலைத் தவணைப் பரீட்சைகள் அரசாங்க பரீட்சைகள் என்றெல்லாம் ஒரே பரீட்சைகள்: இப்போது எல்லாம் ஆயத்தம் செய்துகொண்டிருப்பீர்கள்: எனவே அதிகம் எழுதவில்லை:

கார்த்திகை மாதம் நம்முடன் வாழ்ந்த, பழகிய நம் நண்பர்களை நாம் மறந்துவிடக்கூடாது. ஆத்துமாக்களுக்காக மன்றாடி இப் பரீட்சைக்காலத்தில் அவர்களின் உதவியை வேண்டினுல் நிச்சயம் எமக்கு வெற்றிபெற்றுத் தருவர். மறவாதீர்கள்:

சோதரன்.

இளைஞர் முயற்சி

சேவையாற்றலும் ஆர்வமும் கொண்ட இளைஞர் சிலர் ஒன்றுகூடி வீடுகள் சிலவற்றைத் தரிசித்தனர். இத்தரிசிப்பின் பயன்! அந்த ஆறு ஏழு குடும்பங்களும் ஒருவீட்டில் கூடினர்: செப ஓசை எழுந்தது. ஆம் கூட்டுச் செபமாலை முயற்சி. வாரம் ஒருநாளைக்கு ஒரு வீட்டில் இப் பக்திமுயற்சி நடைபெற்றுவருகிறது. ஐந்து ஆறு பிரிவுகளாக இம் முயற்சி ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றுவருகிறது. இளைஞரே நீங்களும் ஆர்வத்துடன் முன்வந்தால் வெற்றி காண முடியாதா?

—செபமாலைத்தாசன்

எழுதிவிட்டீர்களா ?

எங்கள் அறிமுகப்பகுதிக்கு இதுவரை எழுதாத சகோதரர் தங்களைப்பற்றிய அபிப்பிராயங்களை எழுதி அனுப்புமாறு நினைவூட்டுகிறோம்.

விவாதமேடை

பெற்றோர் விரும்பிச் செய்யும் திருமணம் நன்மையானதா தீமையானதா?

செல்வி சாந்தி விக்ரரின் கருத்துக் கருவூலத்தைக் கீழே படியுங்கள்.

உங்கள் கருத்துகளை இதுவரை எழுதாவிட்டால் இம் மாத முடிவுக்குள் எழுதியனுப்பவும்.

'இளைஞர் உலகு'
ஆயர் இல்லம், யாழ்.

பெற்றோர் விரும்பிச்செய்யும் திருமணம் நன்மையானது

விண்ணிலே குளிர் நிலவாய், மண்ணிலே கண்ணைக் கவரும் வண்ண மலராய்த் திகழவும், தேயாத நிலவெனத் தம் அருஞ் செல்வங்கள் மாயாத புகழ் அடையவும், தம் அயர்வற்ற உழைப்பால் உயர்வு கொண்டு எதையும் தாங்கும் இதயத்துடன் அருந்தொண்டாற்றுவோர் பெற்றோர்: இதன் உட்கருத்தை உணர்ந்தே, பெற்றோர்தான் நம் கண்கண்ட தெய்வமெனத் தங்கத்தமிழில் விளக்கந் தந்தனர் நம் ஆன்றோர்.

எனவே நம் கண்கண்ட தெய்வங்களாகிய நம் பெற்றோர் நமக்குத் தீங்கு இழைக்கவும் மாட்டார்கள், நமக்குத் தீங்கு இழைப்பதையும் விரும்பமாட்டார்கள். ஆதலால் இவர்கள் "திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர்" என்பதை உள்ளத்திருத்தி நமது வாழ்க்கை முழுவதும் அமைதிக் கதிரவனின் ஆனந்தப் பொன்னொளியில் நாம் திருப்தியோடு வாழ வழி செய்வார்கள், ஆகையால் இப் பரந்த பூமியின்கண் தனித்து இயங்குவது கடினமானது என்பதை நாம் உணர்ந்து பெற்றோரின் பொன்னுன ஆசையில மண்ணைத் தூவி அவர்கள் சம்மதத்துக்குத் தடையாக இருக்காமல் மடையாக உதவவேண்டும்.

ஏனெனில், "தந்தைதாய் பேண்" என நம் ஆன்றோர் நமக்கு அறிவு புகட்டியுள்ளனர்: ஆதலால் நாம் நமது பெற்றோரின் வேண்டுகோளுக்கு செவிசாய்த்து அவர்கள் ஆசிர்பெற்று இல்லறத்தை ஆரம்பிப்போமாயின், துக்கத்தின் அணைப்பிலும் துயரத்தின் தழுவலிலும் நாம் வருந்தவேண்டியதில்லை: இதற்கு மாருக நம் வாழ்க்கையில் ஒற்றுமையும் சாந்தியும், நிலவும்: அன்புக் குளிர்நிலவொளி வீசும். எல்லோரும் இன்புற்று வாழும் இவ் வையகத்தில் நமக்கும் பங்கிருக்கும்: இத்துடன் பெற்றோரின் ஆதரவும் கண்காணிப்பும்|எம்மத்தியில்என்றும் இருக்கும்:

இவ்வாறு பெற்றோர் சம்மதத்துடன் அரம்பித்த நம் இல்வாழ்க்கையில் எதிர்பாராதவிதமாய்ப் பிளவு ஏற்பட்டுவிட்டாலுங்கூட நமக்குப் புகலிடமளிக்கப் பெற்றோர் இருக்கிறார்கள்:

இத்தகைய நற்காரியங்கள் அனைத்தும் பெற்றோரின் சம்மதம் இன்றி ஆரம்பிக்கப் படும்இல்வாழ்க்கைக்குக்கிட்டுமா? எனவே நாம் உள்ளத் தூய்மையுடனும், மனச்சாந்தியுடனும் வாழவேண்டுமாயின் பெற்றோரின் சம்மதத்துடன் திருமணம் செய்ய வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

—சாந்தி விக்ரர்

வெளி வருகிறது!

அறிவுக்கு ஓர் மலர்!
அழகுக்கு ஓர் மலர்!
அகவாழ்வுக்கு ஓர் மலர்!
கிறிஸ்மஸ் மலர்
விரைவில் எதிர்பாருங்கள்

ஆத்துமாக்களின் அஞ்சல்

அன்பின் நண்பன் நாதன்!

என்ன! துணிவு உயிர் பிரிந்தாலும் நம் நட்புப் பிரியாது என்று கூறிய நீ நான் இறந்து 3-ம் மாதத்திலே என்னை மறந்துவிட்டாய். இக் கார்த்திகை மாதத்திலும் ஒரு சில நாட்கள்தான் இருக்கின்றது. எனபொருட்டு இந்த ஒருசில நாட்களையாவது செலவிட மாட்டாயா? சினிமா என்றும், கடற்கரை என்றும், கேளிக்கை என்றும் திரிந்தோமே: அந்த இன்பங்கள் எல்லாம் எனக்கு மறைந்துவிட்டன. இப்போது நான் இந்தக் கோர நெருப்பில் வேகாமல் வேகிறேன். சிறிதாவது நண்பன் என்ற முறையில் உதவிசெய்ய மாட்டாயா?

அன்பின் நண்பன்,
அமல்

அன்புத் தோழி சரோ!

வாழவேண்டிய வண்ணச் சிட்டே என்னை விட்டுப் போனுயோ என்று அன்று என் பிணத்தின்மீது விழுந்தடித்து ஒப்பாரி வைத்தாயே. இன்று நான் எங்கிருக்கிறேன், என்ன வேதனைப்படுகிறேன் என்பதை நீ அறிந்தால் ஓடோடி வருவாய். ஆனால் அது உன்னுல் முடியாது. இக் கார்த்திகை மாதத்திலாவது உன்னுல் முடிந்தவற்றைச் செய்தால் எனக்கு எவ்வளவு ஆறுதல் தெரியுமா?

உன் நட்பை
என்றும் மறவாத,
றஞ்சி.

குமார்!

எம் இதயத் துடிப்பிலே நாம் செய்த மோட்டார்ச் சவாரி என் உயிரைப் பலி கொண்டது. அப்பப்பா எனது பிரிவால் நீ எவ்வளவு துயரம் அடைந்தாய்: நீ வேண்டுமென்று என்னைக் கொல்லவில்லை.தற்செயலாக நடந்த விபத்துத்தானே: இறைவன் என் கணக்கைக் கேட்கும்காலம் வந்தது. அவ்வளவுதான்: நான் இப்போது எங்கேயிருக்கிறேன் என்று நீ அறிவாய்தானே: எனவே வீண் கவலையை விட்டு என்னை இவ்விடமிருந்து மீட்பதற்கான முயற்சிகளைச் செய். நானும் உன்னை மறவாது உனக்கு உதவி வேண்டிய சந்தர்ப்பங்களில் உதவுவேன்:

என்றும்
உன் உதவிவேண்டும்,
சுஜித்.

எம்முடன் கூடிக்குலாவி பாடிப்பழகிய எம் இளைஞரான எம் சோதரர் படும் வேதனைகளைக் கேட்டும் நாம் கவனியாது இருப்பது எத்தகைய மதியீனமான செயலாகும். நண்பர்க்காய் வேண்டுவோம்.

—திராட்சையூரான்

வண. விக்ரர் இராசநாயகம் அடிகளாரின் மறைவைக் குறித்துச் சொல்லிய இரங்கற்பா

—(காவலூர்க் கவிஞர் ஞா. மா. செல்வராசா)—

ஆற்ருெணுத் துயரம் நெஞ்சை அடைத்திட மணிக
நாற்றிசை கூவி இராச நாயக அடிகளாரின் [ளெல்லாம்
மாற்றிலா மறைவைக் கூற மனமெலாம் வேகுதந்தோ!
போற்றுமெம் குருவை இந்தப் பூமிசை காண்ப தெப்போ

வளந்திகழ் கண்டி நாட்டின் வளர்குரு மடத்தில் சேர்ந்து
இலங்குசாத் திரங்க ளெல்லாம் ஏர்சிறப் பாகக் கற்றுப்
பலந்தருந் தேவ தொண்டு பார்மிசை யாற்றிநின்ற
இளங்குரு விக்ரர் தம்மின் எழில்முகங் காண்பதெப்போ!

பொன் பொருளொடு மாயப் பூவையர் ஆசை நீத்துத்
தன்னுட லாவியாவும் தற்பர னுக்கா யீந்து
நன்னெறி புகன்றஇராச நாயக அடிகளாரின்
புன்னகை பூக்கும் வாயைப் பூமிசை காண்பதெப்போ!

கண்டியில் பதினே ழாண்டு கடமைகள் புரிந்தபின்பு
சென்றுமே சிங்கப்பூரில் சேர் கொங்கோ மலசியாவில்
இன்றுதென் னமெரிக்காவில் ஈராறு வருடந் தேவ
தொண்டினைப் புரிந்த தூயர தொல்புவி காண்பதெப்போ!

குருத்துவம் பெற்ற முப்பான் ஆண்டுவும் முடிந்ததாலே
அருந்தவக் குருவென் றெண்ணி ஆண்டகை எமிலியானுஸ்
பொருந்துதன் வலப்பாகத்தில் பூசைக்கு உதவ உன்னை
விரு[illegible]யழைத்திட்டாரோ விபுலமில் காண்பதெப்போ?

பூட்டிய அறையில்...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வர் வேதனையால் எழுப்பும் குரலை ஒரு பெண்ணின் குரலென்றும், சவுக்கில் இணைக்கப்பட்டிருந்த கொக்கிகள் ஒன்றோடொன்று மோதிக்கொண்டதால் எழும்ஒலியை ஒரு பெண்ணின் வளையல் ஒலி என்றும் கற்பனைசெய்து அவரில் சந்தேகப்பட்டேனே! அவரைச் சந்திசெய்யவும் நினைத்தேனே! நான் எவ்வளவு பாவி? இக்காட்சியைப் பார்த்து நான் பயந்துவிடுவேன் என்றுதானே என்னை இங்கு இரவில் தங்க வைப்பதற்குத் தயங்கினர். அதற்காகத்தானே இரவில் அந்த வெள்ளைநிற கதவையும் மூடிவிடுகிறார். ஆண்டவரே, இவ்வளவு பெரிய உத்தமரில் சந்தேகப்பட்ட எனக்கு ஏதாவது தண்டனை கொடுத்தருளும். இப்படி இரவெல்லாம் அழுது புலம்பியும் என் மனதிற்குச் சமாதானம் ஏற்படவில்லை. மறுநாள் காலையில் குருவானவரின் கால்களில் விழ்ந்து வணங்கி அவரின் ஆசீர்வாதத்தைப் பெற்றபிறகுதான் என் மனதில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட்டது.

அன்றுமுதல் என் மனதில் ஒரு தீர்மானம் எழுந்தது. எவ்வளவு நல்ல உத்தியோகம் இனி எனக்குக் கிடைத்தாலும் குருவானவரைவிட்டுப் போவதில்லை என்றும், என்வாழ்நாள் முழுவதையும் அவருக்குச் சேவைசெய்தே கழிப்பதென்றும் அவரை என்றும் கண்ணை இமை காப்பதுபோல் காக்க வேண்டுமென்றும் தீர்மானித்துக் கொண்டேன். இவருக்குப் பணிசெய்தாலே என்னுடைய பாவங்களுக்கு மன்னிப்புக் கிடைக்குமென்று நிச்சயமாக நம்பினேன்.

மறுநாள் சுத்தம் செய்வதற்காக அந்த அறைப்பக்கம் போனேன். அந்தப் பூட்டிய அறையின் அருகில் சென்றபொழுது அதற்குமுன் என் உள்ளத்தில் ஏற்படும சந்தேகமும், அந்த அறையில் ஏதோ பயங்கர மர்மம சூழ்ந்திருக்கிறது என்ற உணர்ச்சியும் எனக்கு ஏற்படவில்லை. அதற்குப் பதில் அந்த அறையைக் காணும்பொழுது ஒரு பயம்கலந்த பக்தியும் ஏதோஒரு புனிதமான இடத்தைக்காணும் உணர்வும் என் உள்ளத்தில் ஏற்பட்டது.

ஒரு பூட்டிய அறை என் சந்தேகக் கண்களைத் திறந்து சேவை மனப்பான்மையோடு வாழ வழிசெய்ததை நினைக்கும்பொழுது இன்றும் என்னால் வியப்படையாமல் இருக்க முடிவதில்லை. (முற்றும்)

நன்றித் துதிகள்

பிறேக்நகர பாலக யேசுவின் அருளாலும் கிறிஸ்தவர்களின் சகாயத்தாயின் தயவாலும், புனித சூசையப்பர், ஆரோக்கியநாதர்,செபஸ்தியார், டொமினிக் சேவியர், ஊசியம்மாள் இவர்களின் வேண்டுதலாலும் எங்களுக்கு ஏற்பட்ட வருத்த துன்பங்கள், தொற்று வியாதிகள் நீங்கி, பூரண சுகம் அடைந்து தந்ததற்கு எங்கள் மனம் நிறைந்த நன்றியைச் சமர்ப்பிக்கின்றோம்.

அச்சுவேலி ஓர் அடியாள்.

* * *

புனிதர்களான அந்தோனியார், யாகப்பர், ஆரோக்கிய நாதர், யூதாததேயு, ஊர்சு அன்னை, காணிக்கைமாதா, சகாயமாதா தேவதாய் இவர்கள் மூலம் நான் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப் பெற்றது. மேலும் நான் கேட்டிருக்கும் மன்றாட்டையும் பெறுதற்கும்படி வேண்டி எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். ஓர் அடியாள்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 5-ம் குறுக்குத்தெருவில் 20-ம் இலக்கத்தில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1972-ம் வரு கார்த்திகை மாதம் 25-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300. தாபித: 1876

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org